**<u>சுருக்கம்</u>**

சுற்றுலா – மாநில அரசு திட்டம் – அடிப்படை வசதிகள் – வேலூர் மாவட்டம் திருப்பாற்கடல் அருள்மிகு பிரசன்ன வெங்கடேசப்பெருமாள் திருக்கோவில் பகுதியில் அடிப்படை வசதிகள் மேற்கொள்ள ரூ.26.50 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி, சுற்றுலாத்துறையின் பங்கு ரூ.25.00 இலட்சம் நிதி ஒப்பளிப்பு வழங்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**<u>சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் (சு3) துறை</u>**

**அரசாணை (நிலை) எண்.55** **நாள் 13.02.2015**

திருவள்ளுவராண்டு 2046, ஜய, மாசி 1

**படிக்கப்பட்டது–**

சுற்றுலா ஆணையர், சென்னை அவர்களின் கடித எண்.7733/திமவ 2/2014, நாள் 26.11.2014.

-----

<u>ஆணை</u>

2014–2015 ஆம் ஆண்டுக்கான சுற்றுலாத்துறை மானியக் கோரிக்கை அறிவிப்பின்போது வேலூர் மாவட்டம், திருப்பாற்கடலில் உள்ள பிரசன்ன வெங்கடேசப்பெருமாள் கோவில் மேம்படுத்தப்படும் என மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டது.

2. மேலே படிக்கப்பட்ட கடிதத்தில் சுற்றுலா ஆணையர், சென்னை அவர்கள் வேலூர் மாவட்டம், திருப்பாற்கடல் அருள்மிகு பிரசன்ன வெங்கடேசப்பெருமாள் திருக்கோவில் பகுதியில் இளைப்பாறும் மண்டபம் மற்றும் கழிப்பறை கட்டுவதற்காக ரூ.26.50 இலட்சம் மதிப்பீட்டில் கருத்துரு மற்றும் திட்டமதிப்பீட்டினை இந்துசமய அறநிலையத் துறை ஆணையரிடம் பெற்று அரசுக்கு அனுப்பிவைத்துள்ளார். மேற்காண் பணிகளுக்கு மொத்த திட்டமதிப்பீடு ரூ.26.50 இலட்சத்தில், சுற்றுலாத் துறையின் பங்கு ரூ.25.00 இலட்சம் போக, மீதம் ரூ.1.50 இலட்சத்தினை பொது நல நிதியிலிருந்து மேற்கொள்வதாக இந்துசமய அறநிலையத் துறை ஆணையர் தெரிவித்துள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

3. மேற்கண்ட கருத்துருவை ஏற்று வேலூர் மாவட்டத்தில் உள்ள மிகவும் பிரசித்திபெற்ற திருப்பாற்கடலில் உள்ள அருள்மிகு பிரசன்ன வெங்கடேசப்பெருமாள் கோவில் பகுதியில் இளைப்பாறும் மண்டபம் மற்றும் கழிப்பறை கட்டுவதற்காக ரூ.26.50 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதியும், சுற்றுலாத் துறையின் பங்கு ரூ.25.00 இலட்சத்திற்கு நிதி ஒப்பளிப்பு வழங்குமாறு சுற்றுலா ஆணையர் அரசுக்கு பரிந்துரைத்துள்ளார்.

4. சுற்றுலா ஆணையரின் மேற்கண்ட கருத்துருவை கவனமாக பரிசீலித்த பின்னர் அரசு அதனை ஏற்று பின்வருமாறு ஆணையிடுகிறது–

i. வேலூர் மாவட்டம் திருப்பாற்கடலில் உள்ள அருள்மிகு பிரசன்ன வெங்கடேசப்பெருமாள் கோவில் பகுதியில் இளைப்பாறும் மண்டபம் மற்றும் கழிப்பறை கட்டுவதற்காக ரூ.26.50 இலட்சத்திற்கு (ரூபாய் இருபத்தாறு இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) நிர்வாக

அனுமதியும், அதற்கு சுற்றுலாத்துறையின் பங்காக ரூ.25.00 இலட்சத்திற்கு (ரூபாய் இருபத்தைந்து இலட்சம் மட்டும்) நிதி ஒப்பளிப்பும் வழங்கி ஆணையிடப்படுகிறது.



ii. சுற்றுலாத் துறையின் பங்கு ரூ.25.00 இலட்சம் போக, மீதம் ரூ.1.50 இலட்சத்தினை (ரூபாய் ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) இந்துசமய அறநிலையத்துறை பொதுநல நிதியிலிருந்து மேற்கொள்ளப்பட வேண்டும்.

iii. மேலே பத்தி 4(i)–ல் ஒப்பளிக்கப்பட்ட தொகை ரூ.25.00 இலட்சத்திற்கான (ரூபாய் இருபத்தைந்து இலட்சம் மட்டும்) வங்கி வரைவோலை / நிதி இருப்பு சான்றினை இந்துசமய அறநிலையத்துறை ஆணையர் அவர்களுக்கு வழங்குவதற்கு ஏதுவாக, சுற்றுலா ஆணையருக்கு அனுமதி வழங்கப்படுகிறது.

iv. மேற்காண் பணிகளை செயற்படுத்துதல் மற்றும் பராமரிப்பினை உதவிப் பொறியாளர், இந்துசமய அறநிலையத் துறை, வேலூர் அவர்கள் மூலம் மேற்கொள்வதற்கு சுற்றுலா ஆணையருக்கு அனுமதி வழங்கப்படுகிறது.

v. இத்திட்டத்தை செயல்படுத்துவதில் முன்னேற்றம் குறித்து சுற்றுலாத்துறை அலுவலர்கள் கண்காணிக்க வேண்டும், ஒப்பளிக்கப்பட்ட தொகையில் மீதி இருப்பின் உடனடியாக அரசுக்கு சரண் செய்யப்பட வேண்டும் மற்றும் இத்திட்டம் 31.3.2015க்குள் நிறைவு பெறவேண்டும் ஆகிய நிபந்தனைகளுக்கு உட்பட்டு இந்த ஒப்பளிப்பு வழங்கப்படுகிறது.

5. மேலே பத்தி 4(i)–ல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகை பின்வரும் கணக்குத்தலைப்பில் பற்று வைக்கப்படவேண்டும்:–

"5452 – சுற்றுலா குறித்த மூலதனச் செலவு – 01 – சுற்றுலா அடிப்படை வசதிகள் – 101 – சுற்றுலாத் தலங்கள் – பன்னிரண்டாம் ஐந்தாண்டு திட்டப்பணிகள் – II – மாநிலத் திட்டம் KV – சுற்றுலா மையங்களில் அடிப்படை வசதிகளை மேம்படுத்துதல் – 16–பெரும் பணிகள் ".
(DPC No.5452-01-101-KV-1604)

6. இவ்வாணை நிதித்துறையின் இசைவினை, அத்துறையின் அ.சா.எண். 8928/கல்வி.II/2015, நாள் 13.02.2015 வாயிலாகப் பெற்று வெளியிடப்படுகின்றது.

( ஆளுநரின் ஆணைப்படி )

ரா.கண்ணன்
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்

பெறுநர்
சுற்றுலா ஆணையர், சென்னை–2.
ஆணையர், இந்து சமய அறநிலையத் துறை, சென்னை – 34.
மாவட்ட ஆட்சித் தலைவர், வேலூர் மாவட்டம்.
சம்பள கணக்கு அலுவலர், சென்னை – 9.
சம்பள கணக்கு அலுவலர், சென்னை – 9.
(சுற்றுலா ஆணையர் வழியாக)
மாநில கணக்காய்வுத் தலைவர், சென்னை – 9/18.
நகல்:–

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அலுவலகம், சென்னை – 9.
மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை – 9.
அரசு கூடுதல் தலைமைச் செயலாளரின் தனிச் செயலாளர்,
சுற்றுலா பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை, சென்னை – 9.



சுற்றுலா அலுவலர், வேலூர்.
உதவிப் பொறியாளர், இந்துசமய அறநிலையத் துறை, வேலூர்.
நிதி (கல்வி 2)த் துறை, சென்னை – 9.
சுற்றுலா பண்பாடு மற்றும் அறநிலையங்கள் (சு1/சு2/பொது) துறை, சென்னை–9.
தேசிய தகவலியல் மையம், சென்னை –9 (அரசு இணையதளத்தில் பதிவேற்றம் செய்வதற்காக)
சிறப்பு திட்ட அமலாக்கத் துறை, சென்னை – 9.
(அறிவிப்பு நிறைவேற்றப்பட்டது குறித்து உரிய பதிவுகள் மேற்கொள்ள)
உதிரி/இருப்பு கோப்பு.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்